சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**OS.No. 252 / 2022**

வா.சா.2. சிவராமன் 27.01.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதி தமிழ்செல்வி, பிரதிவாதி கருப்புச்சாமி, வரதராஜன் ஆகியோர்கள் பங்காளி உறவுமுறைகள் என்றால் சரிதான். வாதி எனக்கு அத்தை மகள் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்து அதன் பேரில் அவர்களிடையே மனவருத்தம் இருந்து வருகிறது என்றால் சரிதான். கொடுக்கல் வாங்கல் பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அந்த பிரச்சனை எனக்கு சரியாக தெரியாது. அந்த பிரச்சனை நடைபெற்று காவல் நிலையம் சென்ற விபரத்தை நான் கேள்விபட்டேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் வாதிக்கும் பிரதவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்ட காவல் நிலையம் வரை சென்ற விபரம் கேள்விபட்டேன் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அது பற்றி சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் அவ்வாறு நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கருப்புச்சாமி, வரதராஜன் ஏற்கனவே நிலங்களை விற்பதாக சொன்னதாகவும் அது சம்மந்தமாக நான் பலநபரிடம் வாங்கி கொள்ளுமாறு கேட்டதாகவும் அதை யாரும வாங்க முன்வரவில்லை என்று பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நான் யார் யாரிடம் சென்று கேட்டேன் என்று நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே வரதராஜன் சொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதற்காக சுப்பிரமணியிடம் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். ஏற்கனவே ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் எவ்வாறு வரதராஜன் நிலத்தை விற்பதாக சொன்னார் என்றால் சுப்பிரமணி கிரையம் வாங்க முன்வராததால் வரதராஜன் அவரது நிலத்தை விற்பதாக சொன்னார். சுப்பிரமணி அந்த சொத்தை கிரயம் வாங்க முன்வராத காரணத்தினால் தான் வரதராஜன் என்னிடம் கிரையம் செய்ய விரும்புவதாக சொன்னார் என்று நான் தற்போது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்கு மூலத்தின் 4-வது பத்தியில் அவர்களுக்குள் பிரச்சனை இருப்பதாகவும் அதனால் நான் சென்று தாவா சொத்துக்களை வைத்துக் கொள்ளுமாறு வாதியிடம் சொன்னதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதி பிரதிவாதியிடம் நேரடியாக கிரையம் பெறுவதற்கு

கேட்டதாக சொன்னார்கள் என்றால் அது தவறு என்றால் சரிதான். நான் சென்று தான் வாதியிடம் கிரையம் வைத்துக் கொள்ளுமாறு கேட்டேன். சுப்பிரமணிக்கு செய்து கொடுத்த கிரய ஒப்பந்தத்தை பணம் 5 இலட்சம் கொடுத்து அதை ரத்து செய்துவிட்டு இந்த வாதியிடம் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சுப்பிரமணிக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கின் கிரைய ஒப்பந்த்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பு அரசு வழிகாட்டு மதிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை படி தான் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட படி கிரையம் கொடுக்க முன்வராததால் நான் சென்று பிரதவாதிகளிடம் கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டதாக நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சென்று கேட்ட விபரம் வாதிக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது போல் நான் பிரதிவாதியிடம் கேட்டு இருந்தாலோ அந்த விபரம் வாதிக்கு தெரிந்திருந்தால் அவரது வழக்குரையில் அந்த விபரத்தை குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து இருக்கும் இடம் எனக்கு தெரியும். அந்த சொத்து நல்லிக்கவுண்டன் வலசு போகும் வழியில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலம் நல்லிக்கவுண்டன் வலசிற்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சித்தப்பா வீட்டு நிலம் அந்த ரோட்டிற்கு வடபுறம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் சித்தப்பா பெயர் செல்லமுத்து. அவர் 2, 3 நபர்களுக்கு விற்கப்பட்டு மறுபடியும் 2, 3 கைகள் மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக காவல் நிலையம் சென்ற போது இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது 2 மாதம் கழித்து பிரச்சனை முடிந்த பின்பு ஏற்பட்டது. கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அவர்கள் கொடுக்க வேண்டிய கடன் தொகைக்ககாக தான் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றும் அவர்கள் தாவா சொத்தை கிரையம் செய்வதற்காக அந்த கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சித்தப்பாவின் நிலம் 1 ஏக்கர் நிலம் 24 இலட்சத்திற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு அத்தை மகள் என்பதற்காக அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.01.27 17:39:50 +05'30'

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்